2011 ஆகஸ்ட் 9]

காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. 164 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட நிலங்கள் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆக இந்த 5 ஆண்டு கால ஆட்சி முடிவதற்குள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களும் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

நெல் சாகுபடி

***490—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நீர்வள–நிலவளத் திட்டத்தில் உள்ளடங்கிய திருந்திய நெல் சாகுபடி முறை விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இணையற்ற தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் வேளாண்மைத் துறையில் தமிழகத்தில் நீர்வள—நிலவளத் திட்டத்தில் திருந்திய நெல் (செம்மை நெல்) சாகுபடி முறை விரிவுபடுத்தப்படும், திட்டம் அமோகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செம்மை நெல் சாகுபடியைப் பொறுத்தவரை நீர்வள—நிலவள ஆதாரத் திட்டத்தின்கீழ், ஒரிஜினல் திட்டத்தில் 63 உப வடி நிலங்களில் இதனைச் செயல்படுத்தலாம் என்று இருந்தது. ஆனால் 6 வருட திட்டத்தில் 4 வருடம் 3 மாதங்கள் ஆகியும் இந்தத் திட்டத்திலே, இதுவரைக்கும் 60 உப வடி நிலங்களிலேதான் இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பல*

அரசியல் காரணங்களுக்காக சில முக்கியமான உப வடி நிலங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. அதில் ஒன்று என்னுடைய தொகுதியில் இருக்கிற கௌசிக மகா நதி வடமலைக்குறிச்சியிலிருந்து குல்லூர் சந்தை வழியாகப் போகிற 8 கி.மீ. ஓடுகிற அந்த நதி சார்ந்த உப வடி நிலம், பல அரசியல் காரணங்களுக்காக விடுபட்டுப் போயிருக்கிறது. இந்தத் திட்டம் அதனுடைய முழு வடிவத்திலே நிறைவேற்றப்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏனென்றால் அந்த நீர்வள–நிலவள ஆதாரத் திட்டத்திலே சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் 2004–ல் Equitable Growth Initiative–என்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய முயற்சியின் மூலமாக உருவாக்கப்பட்ட IAMWARM என்ற அந்தத் திட்டம் பல காரணங்களுக்காக இன்னும் சரியாக இயங்காமல் இருக்கிறது. இந்த நீர்வள—நிலவள ஆதாரத் திட்டத்திற்காக ரூ.2,547 கோடி World Bank Funding எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். செம்மை நெல் சாகுபடி அதில் ஒரு முக்கியமான அங்கம். நிறைவேறாத அந்த 3 உப வடி நிலங்கள், குறிப்பாக எங்கள் கௌசிக மகாநதி உப வடி நிலத்தில் விரிவுபடுத்தப்படுமா என்பது என்னுடைய கேள்வி. அதற்கு நீங்கள் ஆவன செய்வீர்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இது நன்றாக நடந்தால்தான் அடுத்த World Bank Funding நமக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன், கேள்வியை நீங்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. க. பாண்டியராஜன்: சரி, ஐயா.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் எந்தத் திட்டங்களாக இருந்தாலும் கிடப்பில் போடப்படுவதில்லை. வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையிலும் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து எந்தெந்த பகுதிகளில் இல்லை என்பதை ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகின்றபோது செம்மை நெல் சாகுபடி என்று சொன்னார்கள். அது மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் திருந்திய நெல் சாகுபடி என்ற நிலையிலே மாற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

துணை மின் நிலையம்

***1384—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களால் நீண்ட காலமாகக் கோரிக்கை வைக்கப்பட்டு, கிராம மக்களால் ஒரு இடமும் மின்சாரத் துறைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அரசைப் பொறுத்தவரையிலே விரைவில் தக்க நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையில் இத்துடன் ஒரு கோரிக்கையையும் சேர்த்து சொல்ல விரும்புகின்றேன்.*